
# [illegible]



– [illegible]




இலங்கை இராணுவத்தளபதி ஜெனரல்சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்தகுற்றவாளிகளை பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகாரசபையின் கீழ் (Global Human Rights Sanction Regime) தடைசெய்வதற்கு பிரித்தானிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி,

பிரித்தானியாவின் வெஸ்டன் சூப்பர் மேர் (Weston Super Mare) பகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் பென்றோஸ் எம்.பி (John Penrose) அவர்களுடன் இராஜதந்திர சந்திப்பு ஒன்று வெள்ளிக்கிழமை (22/09/2023) மதியம் 1.30 மணியளவில் மெய்நிகர் வழியாக இடம்பெற்றுள்ளது.

சட்ட ஆலோசகரும் மனித உரிமைசெயற்பாட்டாளருமான திரு கீத் குலசேகரம் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த முக்கிய சந்திப்பில், இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமாக சர்வதேச மையத்தின் (ICPPG) சார்பில் திரு. றோய் ஜக்ஷான் கலந்துகொண்டார். அத்துடன் இலங்கையில் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவரான கோகுலன் குணசீலன் கலந்து கொண்டு, தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.




கீத் குலசேகரம் அவர்கள் தனது தலைமை உரையின் போது, இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலைக்கு வரலாற்று ரீதியாக பிரித்தானியாவே பொறுப்பு என்பதை விளக்கி, தமிழ்மக்களுக்கு நீதி வழங்க வேண்டிய கடமைப்பாட்டையும் எடுத்துரைத்தார். ITJP மற்றும் ICPPG ஆகிய அமைப்புக்கள் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு (FCDO) போதுமான ஆதாரங்களை சமர்பித்த போதும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்க தவறியிருப்பதனை சுட்டிக்காட்டினார். அத்துடன் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் மட்டுமன்றி, தற்போது இலங்கையில் தொடரும் ஆள்கடத்தல் மற்றும் சித்திரவதைகளும் சவேந்திர சில்வாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயுத படைகளே மேற்கொண்டுவருவதால் அதற்கும் சவேந்திர சில்வாவே பொறுப்பு என்றும், சந்திப்பில் கலந்துகொண்ட சித்திரவதைக்குள்ளானவர்கள் இதற்கு நேரடிசாட்சி என்றும்தெரிவித்தார்.

சவேந்திர சில்வா யுத்தகுற்றங்களில் ஈடுபட்டிருப்பதைஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்படப்பட்டிருப்பதையும், அவர்மீது ஏற்கனவே அமெரிக்கா, கனடா பயணத்தடை விதித்துள்ளதையும் எடுத்துக்காட்டிய அவர், அமெரிக்கா, கனடாவின் வழியை பின்பற்றி பிரித்தானியாவும் தடை விதிக்கவேண்டும் என்று கோரி பிரித்தானிய புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர் என்பதையும் விவரித்தார்.

கருத்துக்களை உள்வாங்கிய பாராளுமன்ற உறுப்பினர் தனது சந்தேகங்களை கேட்டு தெளிவடைந்துடன், ஈழத் தமிழர்களின் கோரிக்கையையும் ஆதங்கத்தையும், தனது பகுதியில் வாழும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தான் பிரித்தானிய அரசிற்கு எடுத்துரைப்பதாகவும், FCDO இதுவரை நடவடிக்கை எடுக்காமைக்கு காரணத்தை கேட்டு கடிதம் அனுப்புவதாகவும் வாக்களித்தார்.

அத்துடன் திரு. கீத் குலசேகரம் கேட்டுக்கொண்டபடி FCDO விற்கு தமிழ் மக்கள் சார்பில் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவினை தடைசெய்யக் கோரி தன்னாலான வகையில் அழுத்தம் கொடுப்பதாகவும் வாக்களித்தார். அத்துடன் இதுவரை தன்னை ஈழத் தமிழர்களின் சந்தித்து தமது பிரச்சனைகள் பற்றி எடுத்துரைக்கவில்லை என்றும், இதுவே முதல் தடவை என்றும் குறிப்பிட்டு நன்றி தெரிவித்தார்.




PENROSEJ

# ??????????? ??????? ?????????????
# ?????????????? ?????????





மறைந்த ஊடகவியலாளரும், கேலிச்சித்திர கலைஞருமான அஸ்வின் சுதர்சனின் 7ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் ஞாபகார்த்த ஊடக கற்கை மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில் மாலை 3.30 மணியளவில் ஊடக அமைய தலைவர் கு.செல்வக்குமாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதலில் அஸ்வின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறைத்தலைவர் பேராசிரியர் கலாநிதி சி.ரகுராம். ஊடக விரிவுரையாளர் கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் மற்றும் யாழ். ஊடக மையத்தின் தயாபரன் ஆகியோரினால் அஸ்வினின் ஞபகார்த்த உரைகள் நிகழ்த்தப்பட்டன.

இறுதியாக அஸ்வினின் குடும்பத்தினரால் வருடாந்தம் முன்னெடுக்கப்பட்டு வரும் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஊடக கற்கைநெறியை தொடரும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட தேவையுடைய மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

ஈழநாடு பத்திரிகையில் தனது ஊடகப்பயணத்தை ஆரம்பித்த அஸ்வின், வலம்புரி, சுடரொளி, வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளில் தனக்கான முத்திரிகைகளை பதித்துள்ளார். அதேவேளை வீரகேசரியின் யாழ்.ஓசை பதிப்பின் ஆசிரியராகவும் கடமையாற்றினார். இதில் இவர் எழுதிய கேட்டியளே சங்கதி என்ற பத்தி எழுத்து பல இடங்களிலும் எதிரொலித்தது. அந்த எழுத்துகள் ஓர் மௌனப் புரட்சியையும் செய்தது.

இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் சிறந்த ஊடகவியலாளர் விருதை கேட்டியளோ சங்கதி பத்திக்காக வழங்கிக் கௌரவித்தது.

இறுதியாக தினக்குரல் பத்திரிகையில் இவர் வரைந்த கருத்தாழமிக்க கார்ட்டூன்கள் வாசகர்களை மட்டுமின்றி அரசியல் தலைவர்களையும் பேசவைத்தது.

அவரது காட்டூன்கள் பல இன்றைய காலத்திற்கும் பொருத்தமான தீர்க்கதரிசன ஓவியங்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


Journalist Aswin Suthars
FFNA
RESS
CLUB












Journalist


Journalist


JAFFNA
PRESS
CLUB
84